**தலைப்பு 222 - இலங்கை தரைப்படை**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தரைப்படையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை தரைப்படையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை தரைப்படைக்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 04 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை தரைப்படையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணகீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை தரைப்படையால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை தரைப்படையின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி இலங்கை தரைப்படையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) மூலதன செலவினம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2021 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதிகளுடன் 2020 ஆம் ஆண்டுக்கான நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட 33 வகை சொத்துகளின் மீதிகளை ஒப்பிடும் போது ரூபா 27.28 பில்லியன் தொகை அதிகமாக இருந்ததுடன் ஏனைய 23 வகை சொத்துக்கள் தொடர்பான அம் மீதிகளிற்கிடையே ரூபா 51.3 பில்லியன் பற்றாக்குறை காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்பிக்கப்பட்ட அசைவு (mobility) அறிக்கை அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்படுகின்ற போதிலும் திறைசேரி அச்சீட்டுத்தாள் காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன, இதனால் இத்தகைய வேறுபாடுகள் அவதானிக்கப்படுகின்றன. | தொடர்புடைய புள்ளிவிபரங்கள் ஒப்பிடப்படாமல் இருப்பதற்கான காரணம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் (ACA-6) ரூபா 7.91 பில்லியன் தொகையான ஒரு வருட இறுதி நடைமுறை வேலை மீதி குறிப்பிடப்பட்டுள்ளதுடன் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறை வேலை ரூபா 3.17 பில்லியனாக இருந்தது, ஆகையால் ரூபா 4.74 பில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இந்த வேறுபாடு ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட உண்மையான செலவினத்திற்கும் பொறியியல் சேவைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாட்டிற்கும் இடையே உள்ள வேறுபாடுகளால் விளைந்துள்ளது. | கட்டிடக் கலைஞரின் சான்றளிக்கப்பட்ட வேலைகளின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு நடைமுறை வேலை ஆண்டின் இறுதியில் கணக்கிற்கு கொண்டுவரப்பட வேண்டும். |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை அல்லது நி.பி. 502(2) இன் இணைப்பு II இன் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும் தரைப்படைக்கு சொந்தமானதும் நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டதுமான 213 காணித் துண்டுகளிற்குரிய 9,420 ஏக்கர் பரப்பளவான காணிகள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன, மேலும் குறித்த ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் விபரங்கள் சரியாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | தரைப்படையில் உள்ள அக் காணிகளை சட்டப்பூர்வமாக சுவீகரிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ள போதிலும் மதிப்பீட்டில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அவை கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. ஆகையால் இந்த காணிகளை சாத்தியமானளவு விரைவாக மதிப்பிட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகள் மற்றும் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 வைப்புக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தரைப்படையால் செயற்படுத்தப்படும் 04 வங்கி நடைமுறைக் கணக்குகள் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த போதிலும் 06 மாதங்களுக்குப் பின்னரும் வங்கிகளிற்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 24.19 மில்லியன் கூட்டுமொத்தப் பெறுமதியான காசோலைகள் நி.பி. 394(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளன. | காலங்கடந்த காசோலைகளை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைத்த பின்னர் இயன்றவரை அவற்றை மீளப் பெறுவதற்கான கோரிக்கைகளைத் தவிர்ப்பதற்கு அவை நி.பி. 570 இன் பிரகாரம் தொடர்புடைய பொது வைப்பு கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.4 வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 தனியார் நிறுவனங்களிடமிருந்து வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடங்களுக்கு மீளாய்வாண்டில் புதிய உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு | நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திருத்தம் செய்வதற்கு பொது திறைசேரிக்கு கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளதுடன் 2022 | வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கை நாளதுவரையாக்க |

| | | |
|---|---|---|
| குறித்த நிலைமையை நாளதுவரையாக்குவதற்குப் பதிலாக முன்னைய ஆண்டின் வாடகை முற்பண மீதிகளும் அடிப்படையாக கொள்ளப்பட்டன. இதனால் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட வாடகை மற்றும் வேலை முற்பண கணக்கு மற்றும் வாடகை மற்றும் வேலை முற்பண ஒதுக்கக் கணக்கில் முறையே ரூபா 18.37 மில்லியன் அதிகமாகவும் ரூபா 86,750 குறைவாகவும் குறிப்பிடப்பட்டு வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் தனிநபர்கள் மற்றும் ஐந்து தனியார் நிறுவனங்களுடன் செய்துகொள்ளப்பட்ட வாடகை முற்பண உடன்படிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வெளிப்படுத்தப்பட வேண்டிய ரூபா 16.48 மில்லியன் கூட்டுமொத்தமான ஆண்டு இறுதி மீதி நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் மேலும் அறவிடப்பட வேண்டிய தொகையை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ப்பட்ட முறையில் பேணுவதற்கும், அந்த நாளதுவரையாக்கப்பட்ட புள்ளிவிபரங்களை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்ப்பனவு செய்யப்படாத கட்டுநிதிக் கணக்கு மீதி ரூபா 131.23 மில்லியனாக இருந்ததுடன் சூடான் மற்றும் மாலி அமைதி காக்கும் பணிகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 5.26 மில்லியன் கூட்டுமொத்தமான முற்பணங்கள் மற்றும் 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 448,198 தொகையான வெளிநாட்டு முற்பணங்கள் ஆகியன தீரப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | விரைவாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளை விரைவாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) இரண்டு மூலதன செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1.03 பில்லியன் கூட்டுமொத்த நிதியேற்பாடு மற்றும் மூலதன | கொவிட் தொற்றுநோய் காரணமாக பெறுகை நடவடிக்கைகளில் ஏற்பட்ட காலதாமதங்கள் இந்த | மதிப்பீடுகளை முடிந்தவரை சரியாக தயாரிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | செலவின விடயம் 222-01-13-2104 இற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 100 மில்லியன் நிதியேற்பாடு என்பன முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தன. | சேமிப்புகளுக்கு பங்களித்திருந்தன. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 16 மூலதன செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 7.1 பில்லியன் மொத்த தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 2.84 மில்லியன் கூட்டுமொத்த நிதியேற்பாடு மற்றும் 07 மீண்டெழும் செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 2.74 பில்லியன் மொத்த தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 401.77 மில்லியன் கூட்டுமொத்த நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்தச் சேமிப்புக்கள் அதற்கு மேற்கொள்ளப்பட்ட தேறிய நிதியேற்பாட்டில் 7 சதவீதத்திற்கும் 93 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டன. | கொவிட் தொற்றுநோய் காரணமாக பெறுகை நடவடிக்கைகளில் ஏற்பட்ட தாமதங்கள் மற்றும் போதுமான திரவ நிதியைப் பெற்றுக்கொள்ளத் தவறியமை என்பன இந்த சேமிப்புக்களுக்கு பங்களித்திருந்தன. | -மேற்படி- |
| (இ) | நான்கு மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் ஒரு மூலதன செலவின விடயத்திற்கு போதுமான அளவு நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாததால் நி.பி. 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களிலிருந்து முறையே ரூபா 1.26 பில்லியன் மற்றும் ரூபா 177.87 மில்லியன் தொகைகள் மாற்றப்பட்டிருந்ததுடன் எட்டு மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் ஐந்து மூலதன செலவின விடயங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட முறையே ரூபா 85.97 பில்லியன் மற்றும் ரூபா 1.95 பில்லியன் நிதியேற்பாடு போதாததன் காரணமாக ரூபா 10.12 பில்லியன் மற்றும் ரூபா 3.54 பில்லியன் தொகையான நிதியேற்பாடு குறைநிரப்பு மதிப்பீடுகளில் இருந்து மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. | செலவின விடயங்களில் இருந்து சேமிக்கப்பட்ட நிதியேற்பாட்டை முகாமை செய்வதற்கு திறைசேரியால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் தொடர்புடைய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | -மேற்படி- |
| (ஈ) | இரண்டு மூலதன செலவின விடயங்களிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 507.56 மில்லியன் குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடு முழுவதும் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு சேமிக்கப்பட்டிருந்தது. | போதுமான திரவ நிதிகளைப் பெற்றுக்கொள்ளத் தவறியமை இந்தச் சேமிப்புகளுக்கு பங்களித்திருந்தன. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நான்கு சந்தர்ப்பங்களில் நான்கு செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 3.04 பில்லியன் கூட்டுமொத்த குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாட்டில் 49 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1.49 பில்லியன் கூட்டுமொத்த நிதியேற்பாடு இந்த ஆண்டின் இறுதியில் உள்ளவாறு சேமிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | செலவின விடயம் 222-01-02-0-1205 (வழங்கல்கள்-ஏனையவை) இற்கு ரூபா 4 பில்லியன் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இந்த செலவின விடயத்திலிருந்து ரூபா 1.19 பில்லியன் தொகை, ரூபா 864.71 மில்லியன் எதிர்கால செலவினங்களை புறக்கணித்தது. நி.பி. 66 இன் கீழ் ஏனைய மூன்று மீண்டெழும் செலவினங்களிற்கு 2021 ஒக்தோபர் 25 இல் மாற்றப்பட்டிருந்தது. | அரச நிதிப்பரப்பில் உள்ள வரம்புகளிற்கு ஏற்ப பொது திறைசேரியின் இணக்கப்பாட்டின் பிரகாரம் தொடர்புடைய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. | -மேற்படி- |
| (எ) | 23 செலவின விடயங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயற்திட்டங்களுக்கு செயல்நடவடிக்கை திட்டத்தில் இருந்து ரூபா 15.08 பில்லியன் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் குறித்த மதிப்பிடப்பட்ட தொகையில் 60 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 9.08 பில்லியன் தொகையானது எதிர்பார்த்த பௌதீக செயலாற்றலை அடைந்துகொள்ள தவறியதால் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு சேமிக்கப்பட்டடிருந்தது. மேலும், இந்த செலவின விடயங்களுக்காக ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ஏற்பட்ட ரூபா 1.57 பில்லியன் பொறுப்புக்களை கருத்தில் கொள்ளும் போது அடைந்துகொள்ளப்பட்ட நிதி செயலாற்றல் 50 சதவீதம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. | திரவ நிதிகளைப் பெற்றுக்கொள்ளத் தவறியமை இந்தச் சேமிப்புகளுக்கு பங்களித்திருந்தது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | தொடர்பாடல் முறைமைகள் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்குடன் பங்கொட இராணுவ முகாமில் மூன்று மாடி மத்திய ஆயுதக் கட்டிடத்தை நிர்மாணித்தல் மற்றும் பயங்கரவாதத்தை தடுக்கும் செயற்திட்டம் (இலங்கை - இந்தியா) போன்ற 03 செயற்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்களிற்காக ரூபா 1.24 பில்லியன் கூட்டுமொத்தமான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த ஆண்டின் இறுதியில் குறித்த நிதியேற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | உலகளாவிய கொவிட் தொற்றுநோய் காரணமாக எழுந்த நடைமுறை சிக்கல் இந்த சேமிப்புகளுக்கு பங்களித்திருந்தது. | -மேற்படி- |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 94(1) மற்றும் 214 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு மாத காலத்திற்குள் தீர்ப்பனவு செய்யப்பட முடியாத 3,027 பொறுப்பு உருப்படிகள் காணப்பட்டதுடன் அவற்றின் பெறுமதி ரூபா 2.27 பில்லியன் ஆகும். | திறைசேரியிடமிருந்து திரவ நிதிகள் பெறப்படாதமை இந்த நிலைமைக்கு பங்களித்திருந்தன. | பொறுப்புக்களை விரைவாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புகள் பற்றிய அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள 43 நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 3.61 பில்லியன் கூட்டுமொத்த பொறுப்புக்கள் அந்த நிறுவனங்களால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், உறுதிப்படுத்தல்கள் வழங்கப்பட்ட 04 நிறுவனங்கள் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தொகையை விட அறிக்கைகளில் ரூபா 57.86 மில்லியனால் பொறுப்புக்களை குறைத்துக் காட்டியிருந்ததுடன் 11 நிறுவனங்கள் ரூபா 578.29 மில்லியனால் பொறுப்புக்களை அதிகரித்துக் காட்டியிருந்தன. | 2021.12.31 அளவில் தரைப்படைக்கு சில விலைப்பட்டியல்கள் கிடைக்காததால் மீதிகளுக்கு இடையே வேறுபாடொன்று காணப்படலாம். | மீதிகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகளுக்கான காரணங்களைக் குறிப்பாக கண்டறிவதன் மூலம் திருத்தங்கள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

## 2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கான ஏழு செலவின விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 937.83 மில்லியன் கூட்டுமொத்த நிதியேற்பாட்டில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 497.22 மில்லியன் தொகை மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது, இதனால் 2 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 440.61 மில்லியன் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், ஆண்டின் இறுதியில் உள்ளவாறு இந்த செயற்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்களை பூர்த்தி செய்ததன் சதவீதம் 03 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | திட்டங்களில் மாற்றங்கள், பெறுகை தீர்மானங்களில் மாற்றங்கள் மற்றும் விலைப்பட்டியல்களை சமர்ப்பிப்பதில் தாமதங்கள் போன்ற காரணங்கள் தொடர்புடைய சேமிப்புக்களிற்கு பங்களித்திருந்தன. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 2.5 முற்பணங்களை வழங்குதலும் தீர்ப்பனவு செய்தலும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) ஒரு ஆண்டிற்கும் 31 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியினுள் சேவையை விட்டு விலகிய 3,754 இராணுவ உத்தியோகத்தர்கள் மற்றும் 527 சிவில் உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா ரூபா 53.18 மில்லியன் கூட்டுமொத்தமான இடர்கடன், விழா மற்றும் விசேட முற்பணங்கள் தொடர்பான கடன் மீதிகள் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்தக் கடன் மீதிகளில் ருபா 8.12 மில்லியன் தொகை 10 முதல் 31 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கடன் மீதிகளாக காணப்பட்டதுடன் 05 | இந்த கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | இந்த கடன் மீதிகள் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 25.12 மில்லியனாக காணப்பட்டது. | | |
| (ஆ) | 569 ஓய்வுபெற்ற இராணுவ உத்தியோகத்தர்கள் மற்றும் 117 சிவில் உத்தியோகத்தர்களிடமிருந்து ஒரு வருடம் முதல் 16 வருடங்கள் வரையிலான காலவிச்சில் அறவிடப்படாதிருந்த கடன் மீதிகள் ரூபா 50.67 மில்லியன் கூட்டுமொத்தமாக காணப்பட்டதுடன் இந்த கடன் மீதிகளில் ரூபா 3.28 மில்லியன் தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்த போதிலும் இந்த கடன் மீதிகள் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | இறந்த 208 இராணுவ மற்றும் சிவில் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் ரூபா 5.44 மில்லியன் கூட்டுமொத்தமாக காணப்பட்டதுடன் இந்தக் கடன் மீதிகளில் ரூபா 341,169 தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதிகளாகும். எவ்வாறாயினும், தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | வேலை இடைநிறுத்தப்பட்ட 5 சிவில் உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதிகள் ரூபா 69,671 கூட்டுமொத்தமாகும். | -மேற்படி- | -மேற்படி- |

2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு தரப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 103 (1) (ஆ) | மீளாய்வாண்டில் தரைப்படைக்குச் சொந்தமான 03 மோட்டார் வாகனங்கள் விபத்துக்குள்ளானதன் காரணமாக ரூபா 2.03 மில்லியன் பெறுமதியான நட்டங்கள் பொலிஸிற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மோட்டார் வாகன விபத்துக்கள் தொடர்பில் பொலிஸிற்கு அறிக்கையிடுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | தொடர்புடைய நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 104 (3),(4) | 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை 73 மோட்டார் வாகனங்களுக்கு ஏற்பட்ட ரூபா 64.89 மில்லியன் பெறுமதியான நட்டங்கள் மற்றும் சேதங்கள் பற்றிய முழுமையான அறிக்கைகளும், மீளாய்வாண்டில் தரைப்படைக்குச் சொந்தமான 13 மோட்டார் வாகனங்களுக்கு ஏற்பட்ட ரூபா 5.17 மில்லியன் பெறுமதியான நட்டங்கள் மற்றும் சேதங்கள் பற்றிய பூர்வாங்க அறிக்கைகளும் 9 மோட்டார் வாகன விபத்துக்கள் தொடர்பாக ரூபா 9.36 மில்லியன் பெறுமதியான நட்டங்கள் மற்றும் சேதங்கள் பற்றிய முழுமையான அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | உரிய அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | -மேற்படி- |

.

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நிதி நிதிப்பிரமாணம் 770(4) மற்றும் 770 (அ) (ஆ) | 2020 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளில் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட 127 மோட்டார் வாகனங்களும் மீளாய்வாண்டில் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட 28 மோட்டார் வாகனங்களும் சேவைக்கு உகந்தவை அல்ல என முடிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயங்கரவாதிகளிடம் இருந்து பெறப்படும் வாகனங்களை கழிவுப் பொருட்களாக அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும், மேலும் ஏனைய வாகனங்களை அப்புறப்படுத்துவதில் ஏற்படும் பிரச்னைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. | -மேற்படி- |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | ஓட்ட நிலையில் உள்ளதும் இராணுவத்தால் பயன்படுத்தப்பட்டு வருகின்றதுமான 2,464 மோட்டார் வாகனங்கள் தொடர்பான எரிபொருளின் நுகர்வுப பரிசோதனை மீளாய்வாண்டிலோ அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளிலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. போக்குவரத்து பிரிவால் தீர்மானிக்கப்பட்ட எரிபொருள் நுகர்வு அளவின் பிரகாரம் ஓட்ட அட்டவணைகள்/ போக்குவரத்து உத்தரவாதங்களில் எரிபொருள் மீதிகள் காட்டப்பட்டுள்ளன. | தற்போது கணிசமான எண்ணிக்கையிலான வாகனங்களில் எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப்பட்டுள்ள துடன் எதிர்காலத்தில் இந்த வாகனங்களின் எரிபொருள் நுகர்வை பரிசோதிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடைந்துகொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிர்மாணங்கள், பெறுகை மற்றும் பதவியணியினர் பயிற்சிகள் உட்பட 23 பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக 100 சதவீதம் இலக்கிடப்பட்ட | திறைசேரியிடமிருந்து திரவ நிதிகள் பெறப்படாமை, காணிகளை கையகப்படுத்துதல் மற்றும் பெறுகைகளில் ஏற்பட்ட தாமதங்கள் இந்த நிலைமைக்கு பங்களித்திருந்தன. | இலக்கிடப்பட்ட திட்டங்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பௌதீக முன்னேற்றம் காட்டப்பட்டிருந்த போதிலும் 16 நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் 50 சதவீதம் அல்லது அதற்கும் குறைவான அளவில் இருந்தது.

### 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மூன்று வருட காலத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகளுக்காக பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்காக ரூபா 36.59 பில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் அல்லது சேவை அலகுகளின் அளவு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 3 ஆண்டு காலப்பகுதிக்கான பெறுகைத் திட்டமொன்றை தயாரிப்பதற்கு மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் எதிர்காலத்தில் கொள்வனவு செய்யப்படும் அலகுகளின் அளவை விரிவான பெறுகை திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வண்டில் கடை முறை, தேசிய போட்டி கேள்வி முறை மற்றும் வரையறுக்கப்பட்ட/ மட்டுப்படுத்தப்பட்ட தேசிய போட்டி பெறுகை முறைகள் ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ரூபா 521.22 மில்லியன் பெறுமதியான பெறுகைகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட பொதுவான விடயங்கள் பின்வருமாறுள்ளன. | | |
| | (i) 200 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்பட்டிருந்த போதிலும் பெறப்பட்ட கூறுவிலைகளின் எண்ணிக்கை 10 இற்கும் குறைவாகவே இருந்ததுடன் கூறுவிலைகளை கோருதல் தொடர்பான பதிவேடுகள், கேள்விதாரர்களுக்கு அனுப்பப்பட்டதற்கான அஞ்சல் ரசீதுகள் அல்லது மின்னஞ்சல் செய்தி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | கொவிட் அபாயம் காரணமாக பல நிறுவனங்கள் கூறுவிலைகளை சமர்ப்பித்திருக்கவில்லை. | கேள்விகளை கோருவதற்கான மாற்று முறைகளைக் கண்டறிந்து, கணக்காய்விற்கு உரிய தகவல்களைக் கிடைக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கேள்விகள் தபால் மூலம் பெறப்பட்டதா அல்லது கேள்வி பெட்டியில் இடப்பட்டதா என்பது கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் பதிவு செய்யப்பட்ட தபாலில் பெறப்பட்ட அஞ்சல் கேள்விகளைத் திறத்தல் தொடர்பான பதிவேடுகள் அல்லது கேள்விப் பெட்டியைத் திறத்தல் தொடர்பான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை வழங்கியிருக்கவில்லை. | தொடர்புடைய பதிவேடுகள் பேணப்பட வேண்டும். |
| (iii) | குறித்த சில கொள்வனவுகளின் போது ஒவ்வொரு வழங்கல் வகைக்கும் அதிக எண்ணிக்கையிலான வழங்குநர்கள் பதிவு செய்திருந்தனர். எவ்வாறாயினும் மிகவும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான வழங்குநர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன, மேலும் இந்த வழங்குநர்களைத் தெரிவுசெய்வதற்கான அடிப்படை கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | கேள்விதாரர்களை தெரிவு செய்ததன் அடிப்படை கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (iv) | தேசிய போட்டி கேள்வி முறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 88.87 மில்லியன் பெறுமதியான பெறுகைகள் தொடர்பான கேள்விகளின் பிரதிகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | -மேற்படி- | கேள்விகளின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (v) | வழிகாட்டல் 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களை புறக்கணித்து ரூபா 352.78 மில்லியன் பெறுமதியான பெறுகைகளுக்கு வரையறுக்கப்பட்ட/ மட்டுப்படுத்தப்பட்ட தேசிய போட்டி கேள்வி முறை பயன்படுத்தப்பட்டிருந்தது. | -மேற்படி- | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் மிகவும் பொருத்தமான பெறுகை முறை தெரிவுசெய்யப்பட வேண்டும். |

(இ) ஒவ்வொரு பெறுகையிலும் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| (i) | ரூபா 274.05 மில்லியன் கிரயத்தில் கட்டிட மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுச் செவ்வைகளின் போது கேள்விகளை திறப்பதற்கான 6.3.3 மற்றும் 6.3.6 ஆம் வழிகாட்டல்களின் பிரகாரம் பேணப்பட வேண்டிய பதிவேடுகள் முறையாக பேணப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. மேலும், வழிகாட்டல் 8.9.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் வழங்குநர்களுடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. மேலும், களஞ்சியங்களிற்கு உரிய பொருட்கள் பெறப்பட்டதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் அல்லது பொருட்கள் பெறப்பட்ட குறிப்புக்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு பதிலாக கேள்வி பிணை அல்லது செலாற்றல் பிணைமுறியை பெற்றுக்கொள்வதற்கும் கேள்வி திறத்தலில் கையொப்பமிடுதலிற்கான பதிவேடுகளை பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பொருட்கள் பெறப்பட்ட குறிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | ரூபா 66.26 மில்லியன் கிரயத்தில் சிக்னல்கள்/ கணனி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு முன்கூட்டிய கேள்வி கூட்டம் நடாத்தப்பட்டதென தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் அறிக்கைகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்காததுடன் ரூபா 7.95 மில்லியன் தொகையான தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், 9.7.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயணக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட இரண்டு நிறுவனங்களின் பங்கேற்புடன் மாத்திரமே முன்கூட்டிய கேள்விக் கூட்டம் நடாத்தப்பட்டிருந்ததுடன் பயணக் கட்டுப்பாடுகளின் விளைவாக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதால் கூறுவிலை கோருவதன் மூலம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | முற்தகைமைகளை பரீட்சிப்பது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். மேலும் பரந்த தகவல் முறைமைகளை கொள்வனவு செய்யும் போது தொடர்புடைய பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | ரூபா 37.88 மில்லியன் செலவினத்தை மேற்கொண்டு 7,500 மீற்றர் Cloth Suede Scarlet ”58/60” ஐ கொள்வனவு செய்தமை தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 5.05 மில்லியன் தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் தாமதத்தின் விளைவாக, அரசாங்கம் ஐ.அ.டொலரின் அதிகரிப்பு காரணமாக தேவையான துணி மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 4.08 மில்லியன் மேலதிக கிரயத்தை செலவிட வேண்டியிருந்தது. | ஷங்காய் துறைமுகத்தில் நடாத்தப்பட்ட இராணுவப் பயிற்சியின் விளைவாக கப்பல் போக்குவரத்து தாமதமானதால் பொருட்களின் இருப்பை பெற்றுக்கொள்ளுதல் தாமதமாகியிருந்தது. | உடன்படிக்கைகளின் பிரகாரம் தண்டப்பணங்கள் அறவிடப்பட வேண்டும். |
| (iv) | ரூபா 36.45 மில்லியன் தொகை செலவிட்டு 1,400 Single Axis Foots மற்றும் கூறுகள் மற்றும் 1,920 Adaptors ஐ கொள்வனவு செய்த போது பெறுகை வழிகாட்டல் 4.2.3 இன் பிரகாரம் பெறுகைக் கால அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சிறிய பெறுகை குழுக்கள் மூலம் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்த்து இரண்டு கேள்விகளாக செயற்படுத்தப்பட்டதால் பெறுகை பொதிகளில் பெறக்கூடிய கிரய நலன்களை பெற்றுக்கொள்ள முடியவில்லை. பெறுகை வழிகாட்டல் 2.14.1 இன் பிரகாரம் குறைந்த கேள்வி பெறப்பட்டிருக்காததுடன் பெறுகை வழிகாட்டல் 7.7 இன் பிரகாரம் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படாத மதிப்பீட்டு காரணிகளைப் பயன்படுத்தி பெறுகைத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன. இதனால் மிகக்குறைந்த விலைமனுவைச் சமர்ப்பித்த கேள்விதாரர் தெரிவுசெய்யப்பட்டிருக்கவில்லை . இதனால் கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது ரூபா 12.96 மில்லியன் தொகை மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவும் கொரோனா தொற்றுநோய் காரணமாக முன்னுரிமைத் தேவையின் அடிப்படையில் இரண்டு கோவைகளின் கீழ் கூறுவிலைகள் கோரப்பட்டதுடன் இதனால் கூறுவிலைகள் மட்டுப்படுத்தப்பட்டதுடன் கையிருப்புக்களை பெறுவதில் தாமதம் ஏற்பட்டது. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | ரூபா 18.03 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 10,500 சோடி கறுப்பு செயற்கை காலணிகளை கொள்வனவு செய்த போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட வழங்குநரிடமிருந்து கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை, மேலும் குறித்த பொருட்கள் 06 குறித்துரைக்கப்படாத விபரக்குறிப்புரைகளுடன் கூடிய ரூபா 737,100 உயர் கூறுவிலையை சமர்ப்பித்திருந்த வழங்குநரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் ஏறத்தாழ 20 மாத காலம் தாமதமாகியிருந்ததால் சிவில் உத்தியோகத்தர்களின் காலணிகளின் தேவைப்பாட்டை உரிய காலத்தில் பூர்த்தி செய்ய முடியவில்லை. மேலும், ரூபா 111,205 தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவும் கொரோனா தொற்று காரணமாக தாமதங்கள் ஏற்பட்டுள்ள நிலையில், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு, களம் மற்றும் தர சோதனை அறிக்கைகளின் அடிப்படையில் முன்னுரிமைகளை கருத்தில் கொண்டுள்ளது. | உடன்படிக்கைகளின் பிரகாரம் தண்டப்பணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். |
| (vi) | ரூபா 15.98 மில்லியன் தொகை செலவிடப்பட்டு மருந்துகள் மற்றும் ஆடைகளை கொள்வனவு செய்த போது கட்டளையிடப்பட்ட கையிருப்பில் 10 சதவீத அளவை வழங்குவதற்கு ஒரு வருடம் மற்றும் 03 மாத காலம் எடுக்கப்பட்டிருந்ததுடன் பொருட்களை வழங்க தவறிய வழங்குநர்கள் தொடர்பாக போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த காலதாமதங்களுக்கு நிலவி வந்த கொரோனா தொற்றுநோய் முக்கிய காரணமாக இருந்தது. | திட்டமிட்டவாறு பெறுகைகளை மேற்கொள்வதற்கும் வழங்குநர்களின் தாமதம் தொடர்பாகவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (vii) | ரூபா 14.86 மில்லியன் தொகை செலவிட்டு Single Axis Foots, 880 Dynamic Foots மற்றும் 610 Adaptors ஐ கொள்வனவு செய்த போது குறித்த பொருட்களை சம்பந்தப்பட்ட களஞ்சியங்களிற்கு வழங்குவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் எடுத்திருந்ததுடன் ரூபா 1.26 மில்லியன் தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தின் | நிலவும் கொவிட் தொற்றுநோய் காரணமாக வெளிநாட்டு விநியோக நிறுவனங்களை மூடுதல் மற்றும் நாணயக் கடிதங்களை திறப்பதற்கு நீண்டகாலம் எடுத்தது இந்த தாமதத்திற்கு காரணமாக இருந்ததுடன் கையாளும் போது சுகாதாரம், நீடித்திருக்கும் தன்மை மற்றும் வசதி போன்ற அளவுகோல்களைக் கருத்தில் கொண்டு சிறந்த தரமான | பெறுகை நடவடிக்கைகள் நன்கு திட்டமிடப்பட்டு, அரசாங்கத்திற்குப் பயன்தரும் வகையில் பெறுகை வழிகாட்டல்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிப்புக்களுக்கு தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் ஜேர்மனியில் உற்பத்தி செய்யப்பட்ட உபகரணங்கள் ரூபா 8.1 மில்லியனிற்கு மேற்பட்ட கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. | உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (viii) | ரூபா 14.52 மில்லியன் தொகை செலவிட்டு 14 வகையான முழங்கால் மூட்டு மற்றும் பாகங்கள் கொண்ட 535 உருப்படிகளை கொள்வனவு செய்த போது பெறுகைக் கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்காததுடன் பெறுகை நடவடிக்கைகளுக்கு ஏறத்தாழ 02 வருட காலம் தாமதம் ஏற்பட்டிருந்தது. இதனால், ஊனமுற்ற வீரர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் தடை காணப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவானது குறைந்த கூறுவிலைகளை சமர்ப்பித்த நிறுவனத்திடமிருந்து பிரமிட் கொண்ட 45 Socket adaptor மற்றும் thermo plastic Socket இற்கான 75 Socket இணைப்புத் தொகுதி (சுற்றளவு தூரம் 400 mm) ஐ கொள்வனவு செய்வதற்கு பரிந்துரை செய்திருந்தது. குறித்த பொருட்களை மாத்திரம் வழங்குவதற்கு அந்த வழங்குநர் இணங்கியிருக்காததால் தெரிவுசெய்யப்பட்ட வழங்குநரிடமிருந்து அந்தப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மீண்டும் பரிந்துரை செய்திருந்தது. குறித்த இரண்டு உருப்படிகளும் அனைத்துப் பொருட்களும் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த குறித்த கேள்விதாரரிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தால், அரசாங்கம் ரூபா 7.34 மில்லியன் செலவினத்தை சேமித்திருக்க முடியும். மேலும், எலும்பியல் | வழங்கல் நிறுவனங்களை மூடுதல் இந்த தாமதத்திற்குக் காரணமாக இருந்ததால், போர்வீரர்களிற்கு சிறந்த தரமான உபகரணம் வழங்கப்பட வேண்டியதால் கையாளும் போது சுகாதாரம், நீடித்திருக்கும் தன்மை மற்றும் வசதி போன்ற காரணிகளை கருத்தில் கொண்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | தேவைப்படும் காலப்பகுதியை இனங்கண்டு வழங்கல்கள் பெறப்பட வேண்டியதுடன் அரசாங்கத்திற்கு பயன்தரும் வகையில் பெறுகை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்நுட்பவியலாளர்களின் சோதனை அறிக்கையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட வழங்குநரிடமிருந்து கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் எலும்பியல் தொழில்நுட்பவியலாளர்களின் பரிந்துரைகள் உட்பட்ட அத்தகைய அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருவில்லை. மேலும், ரூபா 1.09 மில்லியன் செலவில் 50 Clutch பூட்டுக்களை வழங்கிய வழங்குநர், விபரக்குறிப்புரைகளுடன் இணங்கியிருக்காததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உத்தரவாதக் காலப்பகுதியின் எந்தச் சான்றிதழும் கிடைக்காததைச் சுட்டிக்காட்டியுள்ளது. எனினும், அதே வழங்குநரிடமிருந்து கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | | |
| (ix) | கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படாத மதிப்பீட்டு அளவுகோல்கள் ரூபா 7.88 மில்லியன் தொகை செலவிட்டு i5 வகை 60 கணனிகள் மற்றும் 60 UPS ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்கான கேள்வி மதிப்பீட்டில் பயன்படுத்தப்பட்டிருந்தன. விசேட சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படும் 400 W அல்லது அதிக PSU பெறுமதியைக் கொண்ட Casing வகை ATX Tower கொண்ட கணனிகளுக்கான கூறுவிலைகள் விபரக்குறிப்புரையின் மூலம் கோரப்பட்டிருந்ததால், 184 கேள்விதாரர்களில் 07 பேர் மாத்திரமே கூறுவிலைகளை சமர்ப்பித்துள்ளனர். மேலும், ஒரு கேள்விதாரர் மாத்திரமே கூறுவிலைகளை சமர்ப்பித்த 260 W கொண்ட Casing வகை | தரைப்படைக்கு தேவையான தொழில்நுட்ப குறிப்புரைகள் கொண்ட உபகரணங்களை கொள்வனவு செய்ய முடியும். | பெறுகை நடவடிக்கைகள் நன்கு திட்டமிடப்பட வேண்டும், தேவைப்பாடுகள் மற்றும் சந்தை நிலவரத்தைக் கண்டறிந்து விபரக்குறிப்புரைகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் விலைப் போட்டியின் வரம்பிற்கு விபரக்குறிப்புரைகள் அடிப்படையாக இருக்கக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | ATX Tower கொண்ட கணனி பொருத்தமானது என பரிந்துரைக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் விலைப் போட்டியைக் மட்டுப்படுத்துவதற்கும், ஒரு வகை பொருளிற்கான கூறுவிலைகளை கோரி இன்னொரு வகை பொருளை கொள்வனவு செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையாக இது அவதானிக்கப்படுகிறது. மேலும், வழங்குநரால் பரிந்துரைக்கப்பட்ட நியமங்களின் பிரகாரம் வழங்கப்பட்டிருக்காத இரண்டு PSUs ஐ மீண்டும் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்படாமல் கிட்டத்தட்ட 04 மாத காலம் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (x) | ரூபா 4.6 மில்லியன் தொகை செலவிடப்பட்டு PA முறைமை ஒன்றை கொள்வனவு செய்த் போது பெறுகைத் திட்டத்தில் ரூபா 1.52 மில்லியன் தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் குறித்த உபகரணங்கள் ரூபா 4.59 மில்லியன் தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், பெறுகை வழிகாட்டல் 6.3.6 இன் பிரகாரம் பரிந்துரைக்கப்பட்ட படிவங்களின் பிரகாரம் கேள்வி திறத்தல் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | டொலரின் பெறுமதி தளம்பலடைந்திருந்ததால் அது மிகையாக மதிப்பிடப்பட்டிருந்ததுடன் பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக கேள்வியை திறக்கும் நபர்களின் பங்கேற்பு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மதிப்பீடுகள் முடிந்தவரை சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (xi) | ரூபா 2.84 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 240,000 யார் பைப்பிங்களை (yards of piping) கொள்வனவு செய்த போது விபரக்குறிப்புரைகள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் பாதுகாப்பு அமைச்சின் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களில் இருந்து கேள்விதாரர்கள் தெரிவு செய்யப்பட்டதென குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஒரே நபரின் பெயரில் அல்லது அவரது உறவுகளின் பெயரில் இயங்குகின்ற இரண்டு | கொவிட் அபாயத்தின் விளைவாக, நிபுணத்துவம் பெற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற முடியாதிருந்ததால் விபரக்குறிப்புரைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் உரிய திகதியில் உரிய இருப்புக்கள் பெறப்பட்டிருந்த போதிலும் இருப்புகளின் கணக்கீடு மற்றும் பெறுவனவு சான்றிதழ்களை வழங்குதல் என்பன தாமதமாகியிருந்தது. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனங்களைத் தெரிவுசெய்து கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பெறுகை வழிகாட்டல் 6.3.3 இன் பிரகாரம் பேணப்பட வேண்டிய ஆவணங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 113,600 தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (xii) | தியகவ இராணுவப் பயிற்சி நிகழ்விற்காக ரூபா 1.22 மில்லியன் தொகை செலவிடப்பட்டு G28 தடிமன் கொண்ட 8"x32" அளவுள்ள 750 தகடுகளும், 12"x32 அளவுள்ள 870 தகடுகளும் தியகவ இராணுவப் பயிற்சி நிகழ்விற்காக கொள்வனவு செய்த போது கொள்வனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் G28 தடிமனுக்குப் பதிலாக G34 தடிமன் குறைவான கூரைத் தகடுகளை சமர்ப்பித்த கேள்விதாரரிடமிருந்து கூரைத்தகடுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், தொழில்நுட்ப விபரக்குறிப்புரைகளை உருவாக்கும் போது தேவைப்பாடு இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும், 450 தகடுகளுக்கான கூறுவிலைகளை கோரி 1,620 தகடுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஆகையால் அளவு அதிகரித்ததன் காரணமாக கழிவுகள் அல்லது கிரய நலனைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. | பொருட்கள் இல்லாத காரணத்தாலும், நாட்டில் நிலவும் கொவிட் தொற்றுநோய் காரணமாகவும், பொருட்களை கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்கியிருந்த ஒரே நிறுவனம் என்பதாலும் குறிப்பிட்ட திகதியில் சேவைத் தேவையின் பேரில் கூறுவிலைகளை கோரி கொள்வனவுகளை மேற்கொள்ள முடியாதிருந்ததாலும் இந்த முறையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும், உரிய முறையில் விரைவான சேவையைப் பெற்றுக்கொளளும் நோக்கில் மதிப்பீடுகளை புறக்கணித்து சம்பந்தப்பட்ட பொருட்கள் கெள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் விலைப் போட்டியை மட்டுப்படுத்துவதற்கும் ஒரு வகைப் பொருளுக்கு கேள்வியை கோரி மற்றொரு வகைப் பொருளை கொள்வனவு செய்வதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (xiii) | ரூபா 1.08 மில்லியன் தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு சோபா தொகுதிகள் மற்றும் 2 கோப்பி மேசைகள் வருடாந்த பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை, மேலும் கேள்விதாரர்களுக்கு விபரக்குறிப்புரை அனுப்பப்பட்டுள்ளது என | வழங்கப்பட்ட மாதிரிகளை பரிசோதித்து, கூறுவிலைகளைச் சமர்ப்பித்த நிறுவனங்களுக்குச் சென்று, தரம், பூர்த்தி தன்மை, நீடித்திருக்கும் தன்மை மற்றும் வலிமை ஆகியவற்றை பரிசோதித்து கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததன் | கேள்விதாரர்களுக்கு குறித்துரைக்கப்பட்ட விபரக்குறிப்புரைகள் வழங்கப்பட வேண்டியதுடன் கேள்விகளின் மதிப்பீட்டின் போது விபரக்குறிப்புரைகள் கருத்தில் கொள்ளப்பட |

| | | |
|---|---|---|
| குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் விபரக்குறிப்புரைகளின் பிரகாரம் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் 6 சதவீதத்திலிருந்து 52 சதவீதம் வரை பெரிய விலை தளம்பல்களுடன் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மேலும், கொள்வனவு செய்யும் போது விபரக்குறிப்புரைகள் கவனிக்கப்பட்டிருக்கவில்லை. வழங்குநரால் பொருட்களுக்கு உத்தரவாதக் காலப்பகுதி வழங்கப்பட்டிருக்கவில்லை. | மூலம் பரிந்துரைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். மேலும் அரசாங்கத்திற்கு மிகவும் பயனுள்ள உத்தரவாதக் காலப்பகுதியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

-----------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாலி நாட்டில் அமைதி காக்கும் பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 685 துருப்புக்களுக்குத் தேவையான பொருட்கள், கவச மற்றும் ஆயுதம் இல்லாத வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட போக்குவரத்து மற்றும் ஏனைய உபகரணங்களில் ரூபா 1.38 பில்லியன் பெறுமதியான போக்குவரத்து மற்றும் உபகரண இருப்பு மற்றும் பெறுமதி வெளிப்படுத்தப்பட்டிருக்காத ஏனைய வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் இருப்பு என்பன தீவின் பல்வேறு பிராந்தியங்களில் உள்ள களஞ்சியங்களில் விளைவற்றிருந்தன. | உரிய பொருட்கள், கவச மற்றும் ஆயுதமற்ற வாகனங்கள் மற்றும் உபகரணங்களை தேவைக்கேற்ப பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவைப்பாட்டின் பிரகாரம் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்பட வேண்டியதுடன் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட போக்குவரத்து மற்றும் உபகரணங்களின் இருப்பு, அரசாங்கத்திற்கு அதிகபட்ச நலனைப் பெறும் வகையில் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | யுத்த காலத்தில் பயங்கரவாதிகளிடமிருந்து பெறப்பட்ட 595 வாகனங்களின் சட்டரீதியான உரிமைத்துவம் தரைப்படைக்கு மாற்றப்பட்டிருக்காததுடன் தரப்படைக்கு சொந்தமான 3,070 வாகனங்களுக்கு காப்புறுதி | குறித்த வாகனங்களை இடமாற்றம் செய்யுமாறு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திடம் பல தடவைகள் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளதுடன், காப்புறுதி மேவுகை இல்லாமல் எஞ்சியுள்ள | வாகனங்களின் சட்டரீதியான உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கும் காப்புறுதி மேவுகை இல்லாத வாகனங்களுக்கு காப்புறுதி மேவுகையை |

| | | | |
|---|---|---|---|
| | மேவுகை பெறப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களுக்கு காப்புறுதி மேவுகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் அளவையாளரால் செய்யப்பட்ட சட்ட திட்ட இலக்கம் P.P.KA 3784 இன் மூலம் 2007 ஆம் ஆண்டில் கண்டி மாவட்டத்தின் குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவில் 14 ஹெக்டெயர் பரப்பளவான காணியை குண்டசாலை பிரதேச செயலாளர் தரைப்படைக்கு வழங்கியிருந்தார். இந்த காணி பயன்படுத்தப்படாமல் இருந்ததால், 2016 ஆம் ஆண்டில் அளவையின் போது அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்பாளர்கள் இந்தக் காணியை வலுக்கட்டாயமாக பயன்படுத்தியமை தரைப்படைக்கு வெளிப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், இந்த காணியில் உள்ள அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ அல்லது அவர்களை வெளியேற்றுவதற்கான வேறு பொருத்தமான நடவடிக்கைகளுக்கோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த காணிக்கு தீர்வு வழங்குமாறு சட்டமா அதிபரிடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. | தரைப்படையின் சொத்துக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மட்டக்களப்பு மாவட்டத்தில் வருடாந்தம் ரூபா 1.7 மில்லியன் தொகை செலவிட்டு 5.74 ஏக்கர் நிலப்பரப்பிற்குரிய 39 காணித்துண்டுகளில் வீடுகள் அல்லது களஞ்சியங்களை நிர்மாணிப்பதற்காகவும் வருடாந்தம் ரூபா 187.37 மில்லியன் செலவிட்டு தங்குமிடம், அலுவலகம் மற்றும் களஞ்சிய வசதிகளுக்காக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 217,191 சதுர அடியிலான 39 கட்டிடங்களை பெற்றுக்கொள்வதற்காகவும் 30 ஆண்டு காலத்திற்கு மேலாக | இந்த காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையாளர்களை இனங்கண்டு அவற்றை கையளித்து தரைப்படையின் தேவைக்கு ஏற்ப 39 கட்டிடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்களை அதிகபட்சமாகப் பயன்படுத்துவதற்கும், செலவினங்களைக் மட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாடகை அடிப்படையில் பெறப்பட்ட காணிகள் மற்றும் கட்டிடங்களுக்காகவும் அரசாங்கத்திற்குச் சொந்தமான வேறு காணிகளையோ அல்லது கட்டிடங்களையோ பெற்றுக்கொள்வதில் இதுவரை கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் உட்பட ஏனைய அரச நிறுவனங்களின் மூன்று கட்டளை மற்றும் பதவியணியினரின் வாகனங்கள், 02 டபிள் கெப் வண்டிகள், 04 ஜீப்கள், 06 கெப் வண்டிகள், 05 பேருந்துகள், 02 சரக்கு போக்குவரத்து வாகனங்கள், 17 நீர் பவுசர்கள், ஒரு டிப்பர், ஒரு Gully Trailer, 07 அம்புலன்ஸ் வண்டிகள் மற்றும் 11 மோட்டார் சைக்கிள்கள் முறையாகப் கையேற்கப்படாமல் தரைப்படையால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. | அரசாங்க திணைக்களங்கள் உட்பட ஏனைய சிவில் நிறுவனங்கள் தரைப்படைக்கு வாகனங்களை நன்கொடையாக வழங்கியுள்ளதுடன், இலங்கை தரைப்படையின் நடைமுறைக்கு இணங்க நிர்வாக நடவடிக்கைகளின் வசதிக்காக ශ්‍රී இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. | உரிய சொத்துக்களை முறையாக கையேற்பதற்கு அல்லது சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | KA – 5972 (ශ්‍රී 16024) ஆம் இலக்கத்தையுடைய ரெயாட்டோ கொரில்லா மேட்டார் கார் மற்றும் 52 – 5035 (ශ්‍රී 0157) ஆம் இலக்கத்தையுடைய நிசான டபிள் கெப் வண்டி என்பன முறையான அங்கீகாரம் பெறப்படாமல் மூன்றாம் தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | மேஜர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவின் நெருங்கிய உறவினரின் பாவனைக்காக 2005 ஆம் ஆண்டு முதல் மோட்டார் கார் வழங்கப்பட்டுள்ளதுடன், சிறி சீலவிசுத்தி மகாநாயக்க தேரருக்கு 1995 ஆம் ஆண்டு முதல் டபிள் கெப் வண்டி வழங்கப்பட்டுள்ளது. | முறையான அங்கீகாரம் பெறப்படாமல் அரசாங்கத்தின் சொத்துக்கள் மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப்படக் கூடாது. |
| (எ) | தேவைப்பாடு முறையாக இனங்காணப்படாமல் ரூபா 2.44 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப்பட்டு 2010 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட 29 சலவை இயந்திரங்கள், 16 டிஜிற்றல் தராசுகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் stabilizers உட்பட 66 மின்சாரப் பொருட்களுக்கான உத்தரவாதக் காலப்பகுதி காலாவதியானது காலாவதியாகியிருந்ததுடன் | தொற்றுநோய் பரவுவதை எதிர்வுகூற முடியாது என்பதால் இந்த இலத்திரனியல் பொருட்கள் கொரோனா தனிமைப்படுத்தல் மையங்களுக்காகப் பெறப்பட்டு அவை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. | தேவைப்பாடு மற்றும் வழங்கலை சரியாகக் கண்டறிந்து கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அந்த பொருட்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தன. | | |
| (ஏ) | ரூபா 3.9 மில்லியன் தொகை செலவிடப்பட்டு ஒரு வருட உத்தரவாத காலத்துடன் கொள்வனவு செய்யப்பட்ட 50 கிலோகிராம் எடையுள்ள 34 டிஜிற்றல் தராசுகள், 20 கன அடி அளவுள்ள 08 ஆழமான உறைவிப்பான்கள் மற்றும் 08 கன அடி அளவுள்ள 03 குளிர்சாதனப் பெட்டிகள் உட்பட அறுபத்தைந்து இலத்திரனியல் மற்றும் மின்சார உபகரணங்கள் தரைப்படையின் ராகம மற்றும் வெயங்கொட களஞ்சியங்களில் கொள்வனவு செய்யப்பட்ட பின்னர் 05 முதல் 12 மாதங்கள் வரையான காலப்பகுதியில் விளைவற்றிருந்தன. | தேவைப்பாட்டின் பிரகாரம் தராசுகள் மற்றும் குளிர்சாதன பெட்டிகள் வழங்கப்படும். | தேவைப்பாடு மற்றும் வழங்கலை சரியாகக் கண்டறிந்து கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஐ) | பல வருடங்களுக்கு முன்னர் தேவைப்பாடு மற்றும் பயன்பாட்டினை இனங்காணாமல் கொள்வனவு செய்யப்பட்ட இருபத்தைந்து இரும்பு மேசைகள், 222 இரும்பு அலுமாரிகள் மற்றும் 113 விருந்தினர் நாற்காலிகள் வழங்கப்படாமல் ராகமவில் உள்ள இராணுவக் களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்தன. மேலும், 2011 ஆம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட உத்தியோகபூர்வ badges, தொப்பிகள், சேட்டுகள் மற்றும் பொத்தான்கள் அடங்கிய 16 சீருடை கையிருப்புப் பொருட்களில் 69,669 அலகுகள் வெயங்கொடையில் உள்ள இராணுவக் களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தன. இந்த ஆடைகள் மற்றும் உத்தியோகபூர்வ badges மெதுவாக வழங்கப்படுவதால் நிறமாற்றமடைந்து சிதைந்திருந்ததுடன் குறித்த இருப்புக்களின் பெறுமதி கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த இருப்புக்கள் தேவைப்பாட்டிற்கேற்ப வழங்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | ரூபா 3.4 மில்லியன் தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட இருநூறு cover outers ராகம களஞ்சிய வளாகத்தில் ஏறத்தாழ 01 முதல் 05 வருடங்கள் வரையான காலம் வழங்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தன. இதனால், அவற்றின் செயற்திறன் பாதிக்கப்பட்டது. | இந்த cover outers ஐ பயன்படுத்தும் வாகனங்கள் ஓடாமல் அகற்றப்பட்டுள்ளதுடன் இந்த நிலை ஏற்பட்டுள்ளதால் அவை கோரப்பட்ட அளவுக்கேற்ப வழங்கப்படுகிறது. | -மேற்படி- |
| (ஓ) | தரைப்படையினரால் பயன்படுத்தப்பட்ட 569 காணித்துண்டுகளுக்குச் சொந்தமான 20,656 ஏக்கர் காணி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதமே இதற்குக் காரணமாகும். மேலும் காணிகளின் மதிப்பீட்டை விரைவுபடுத்தி கணக்குகளிற்கு அவற்றை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சம்பந்தப்பட்ட காணிகளின் மதிப்பீடு விரைவுபடுத்தப்பட்டு கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெரஹர பிரதேசத்தில் இராணுவ மருந்துக் களஞ்சியசாலை ஒன்று நிறுவப்பட்டுள்ளதுடன், மருந்துப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக உரிய தரத்திற்கு இணங்க இந்தக் கட்டிடம் அமைக்கப்பட்டிருக்கவில்லை. பாதுகாப்பு கமரா முறைமையும் பொருத்தப்பட்டிருக்கவில்லை. கொவிட் - 19 ஐத் தடுப்பதற்குத் தேவையான ரூபா 45.6 மில்லியன் பெறுமதியான மருத்துவப் பொருட்கள், எதனோல் மற்றும் சுகாதாரப் பொருட்களின் பெருந்தொகை என்பன கட்டிடத்தின் படிக்கட்டு மற்றும் மேல் தளத்தின் நடைபாதையில் முறையற்றவாறு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. மழை நாட்களில், குறித்த களஞ்சிய பொருட்களிற்கு மழைநீர் செல்லும் அபாயம் உள்ளது. இந்த வளாகத்தில் மருந்துகளை களஞ்சியப்படுத்துவதற்காக 14,450 சதுர அடியில் களஞ்சிய அறையொன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் | இந்தக் கட்டிடம் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளதுடன் புதிய கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் தொடங்கப்பட உள்ளன. | திட்டமிடப்பட்ட மருந்து களஞ்சிய கட்டிடத்தை நிர்மாணிக்கும் பணியை விரைவுபடுத்துவதற்கும், அதுவரை பொருட்கள் சேதமடையாமல் உரிய மருந்து மற்றும் மருத்துவ வழங்கல்களை சேமித்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

நிர்மாணப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 நட்டங்களும் சேதங்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பயங்கரவாதத் தாக்குதல்கள் மற்றும் 497 வாகன விபத்துக்கள் காரணமாக இராணுவத்தின் ஆயுதங்கள் உட்பட பல்வேறு சொத்துக்களுக்கு ஏற்பட்ட 125 நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக முறையே ரூபா 13.78 பில்லியன் மற்றும் ரூபா 282.05 மில்லியன் தொகைகளை உள்ளடக்கிய ரூபா 14.06 பில்லியன் கூட்டுமொத்தமான இறுதி மீதி அந்த ஆண்டில் காணப்பட்டது. மேலும், குறித்த நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக 10 ஆண்டுகள் மற்றும் 05 ஆண்டுகளிற்கு மேலாக முறையே 119 மற்றும் 263 சம்பவங்களிற்குரிய ரூபா 840.7 மில்லியன் மற்றும் ரூபா 12.99 பில்லியன் நட்டங்கள் காணப்பட்டன. இந்த மீதிகளை அறவீடு செய்தல் அல்லது பதிவழித்தல் மந்தமாக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட புத்தகங்களில் இருந்து பதிவழித்தல் கூற்றில் 16 நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக ரூபா 47 மில்லியன் ஆரம்ப மீதி மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ஏனைய நட்டங்கள் மற்றும் சேதங்களின் ஆரம்ப மீ"திகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்கள் மூலம் ஆரம்ப மீதிகளை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் அதே நேரம் தொடர்புடைய மீதிகளை அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | தொடர்புடைய நட்டங்கள் மற்றும் சேதங்களை அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கும் நிதிக்கூற்றுக்கள் மூலம் ஆரம்ப மீதிகளை வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 12 வாகன விபத்துக்கள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்கள் பற்றிய கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நட்டங்கள் மதிப்பிடப்படாத 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் நிகழ்ந்த வாகன விபத்துக்களின் எண்ணிக்கை 88 ஆகும். | இந்த நட்டங்கள் மற்றும் சேதங்களை மதிப்பிடுவதற்கும், நிதிக்கூற்றுக்கள் மூலம் அவற்றை வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்புடைய நட்டங்கள் மற்றும் சேதங்கள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இராணுவத்தில் இடம்பெற்ற கூப்பன் முறைகேடுகள் தொடர்பான ரூபா 4,47 மில்லியன் தொகையான 25 சதவீத திணைக்களக் கட்டணம் இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இராணுவத் தளபதியின் முடிவினைத் திருத்துவதன் மூலம் திணைக்களக் கட்டணங்களை அறவீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | உரிய திணைக்கள கட்டணம் அறவிடப்பட வேண்டும். |

**3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவைப்பாட்டை சரியாக இனங்காணாமல் கடந்த வருடங்களில் கொள்வனவு செய்யப்பட்ட சில உபகரணங்கள், எழுதுபொருட்கள், மின்சார உபகரணங்கள், cover outers மற்றும் batteries என்பன நீண்ட காலமாக ராகமவில் உள்ள இராணுவத்தின் களஞ்சியங்களில் விளைவற்றிருந்தன. கையிருப்பில் உள்ள பொருட்கள் காலாவதியாகிவிட்டதால் அல்லது பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால், ரூபா 100,405 பெறுமதியான 10 வகையான பொருட்களுக்கு சொந்தமான 390 பொருட்கள் 2021 ஆம் ஆண்டில் அகற்றப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 3.37 மில்லியன் பெறுமதியான 27 வகைப் பொருட்களைச் சேர்ந்த 353 பொருட்களை அகற்றுவதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. இதனால் ரூபா 3.47 மில்லியன் கூட்டுமொத்தப் பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதிலிருந்தான பொருளாதார நலன்களை அரசாங்கம் பெற்றிருக்கவில்லை. | பயன்படுத்தப்படாமல் பயன்படுத்த முடியாததாக மாறிய பொருட்கள் கானப்பட்டதால் அவை கண்டன சபைக்கு (Condemnation Board) சமர்ப்பிக்கப்பட்டு இருப்புகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வழங்கப்பட்ட தேவைப்பாடுகள் மற்றும் அளவுகளைக் கருத்தில் கொண்டு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். |

4. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இராணுவத்தில் சிரேஷ்ட நிலையின் 04 வெற்றிடங்கள், மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலையின் 83 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை ஆகியவற்றின் 20,923 வெற்றிடங்கள் அடங்கிய சிவில் பதவியணியினரின் 1,456 முழு வெற்றிடங்களும் இருந்தன. எவ்வாறாயினும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை உரிய முறையில் திருத்துவதற்கு அல்லது அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காததால் பல்வேறு நிர்வாகச் சிக்கல்கள் எழுந்தன. மேலும், மீளாய்வாண்டில் எந்தவொரு பயிற்சிக்காகவும் குறிப்பிடப்பட்ட சேவையில் பணிக்கமர்த்தப்பட்ட உண்மையான பதவியணி உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களின் எண்ணிக்கை 52,752 வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. | அரச சேவையில் ஆரம்ப நிலை வெற்றிடங்களை நிரப்புவது மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதால், அந்த வெற்றிடங்களை நிரப்ப முடியவில்லை. மேலும், ஆரம்ப, சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலை வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக பொது நிர்வாக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், நாட்டில் நிலவும் கொவிட் தொற்றுநோய் காரணமாக, திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்த முடியாததன் விளைவாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை உண்மையான பதவியணியினரிற்கு ஏற்றவாறு திருத்துவதற்கு மற்றும் பணியாளர் பயிற்சியின் மூலம் செயலாற்றலை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |